# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 64 /பேரூ/2026**
**நாள் : 05.08.2026**

M. ஆரோக்கியசாமி,
அனுமந்தன்பட்டி,
தேனி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
அனுமந்தன்பட்டி பேரூராட்சி,
தேனி மாவட்டம். – எதிர் மனுதாரர்

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், அனுமந்தன்பட்டி அஞ்சல், கோவிந்தன்பட்டி, W-12-4-20, RC தெற்குத் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. ஆரோக்கியசாமி என்பவரது **03.03.2026** நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் **05.03.2026** அன்று பெறப்பட்டு, **64/பேரூ/2026** என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், அனுமந்தன்பட்டி அஞ்சல், கோவிந்தன்பட்டி, W-12-4-20, RC தெற்குத் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. ஆரோக்கியசாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது **03.03.2026** நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"நான் மேற்கண்ட முகவரியில் கடந்த **50** வருடங்களாக வசித்து வருகிறேன். வீட்டுமனை சர்வே எண். **381/2F1** மற்றும் சர்வே எண். **1097/18** கொண்ட வீட்டுமனை சொத்துக்களை எனது தந்தை (M. மைக்கேல்) உத்தமபாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் **08.11.2024** அன்று எனது பெயருக்கு (M. ஆரோக்கியசாமி) மாற்றி பதிவு செய்யப்பட்டது. சர்வே எண். **381/2F1** மற்றும் சர்வே எண். **1097/18** கொண்ட வீட்டுமனையில் உள்ள குடிநீர் இணைப்பு வரி மற்றும் சொத்து வரியில் எனது பெயருக்கு மாற்றி தரக் கோரி நேரிடையாக தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகாவில் உள்ள அனுமந்தன்பட்டி பேரூராட்சி அலுவலகத்தில் **11.11.2025** நாளிட்ட கடிதம் மூலம் முறையிட்டும் இரண்டு மாதங்களாக அனுமந்தன்பட்டி பேரூராட்சியில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இது தொடர்பாக கடந்த **14.01.2026**ஆம் தேதியன்று அலுவலகத்தை அணுகியதில் இப்பேரூராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் B. ஜீவராஜ் (வரி வசூலிப்பவர்) என்பவர் என்னை மிக

தரக்குறைவான வார்த்தையால் பேசியது மட்டுமில்லாது, நீ எங்கு வேண்டுமானாலும் என்னைப் பற்றி சொல்லிக்கொள். அமெரிக்காவுக்கு போய் கூட என்னைப்பற்றி சொல் என்று கூறி என்னை யாரும் ஒன்றும் செய்துவிட முடியாது எனக்கூறி எனது மனுவை நிராகரித்து விட்டார்.

குறிப்பு:

1. நான் குடியிருந்து வரி கட்டுவது அனுமந்தன்பட்டி பேரூராட்சி உட்கடை.
2. நான் குடியிருப்பதோ அனுமந்தன்பட்டி பேரூராட்சி
3. நான் குடியிருப்பதோ தேனி மாவட்டத்தில்
4. நான் குடியிருப்பதோ தமிழ்நாட்டில்
5. நான் குடியிருப்பதோ இந்தியாவில்
6. பின் நான் ஏன் அமெரிக்கா செல்ல வேண்டும்.

மேலும் இது தொடர்பாக கடந்த 07.02.2026ஆம் தேதியன்று அனுமந்தன்பட்டி பேரூராட்சியில் உள்ள செயல் அலுவலர் அவர்களை அணுகினேன். ஆனால் என்னுடைய மனு தொடர்பாக மேற்கண்ட சொத்து இனங்களுக்கு குடிநீர் மற்றும் சொத்து வரிக்கு திரு. B. ஜீவராஜ் (வரி வசூலிப்பவர்) அவர்கள் ரூ.11,300/- கேட்கிறார் என்று புகார் கூறினேன். அதற்கு செயல் அலுவலர் அவர்கள் இதுகுறித்து விசாரிப்பதாக கூறினார்.

வீட்டுமனை சர்வே எண். 338/2A1B (பட்டா எண். 6525)ல் அமைந்துள்ள வீட்டுமனைக்கு 10.03.2025 அன்று சொத்து வரி விதிப்புக்கு ரூ.22,000/- பெற்றுக் கொண்டு ரூ.12,520/- (வரி விதிப்பு எண். 3071)க்கு மட்டும் திரு. B. ஜீவராஜ் அவர்கள் இரசீது கொடுத்தார். ரூ.9,480/-க்கு இரசீது கொடுக்கப்படவில்லை.

மேற்கண்ட வீட்டுமனைக்கு குடிநீர் இணைப்பு வழங்க 08.12.2025 அன்று மனு செய்தேன் என்ன இணைப்புகள் வேண்டும் என்று கேட்டேன். அதற்கு மனு கொடுத்த உடனே புதிய இணைப்பு கொடுக்கனுமா என்று நக்கலாக கூறினார். இருந்தும் பலமுறை சந்தித்து கோரிக்கை வைத்தேன். 10.01.2026 அன்று ரூ.1,110/- கொடுக்கச் சொன்னார். கொடுத்தேன். இதில் ரூ.110/-க்கு மட்டும் இரசீது கொடுத்தார். ரூ.1000-/க்கு இரசீது கொடுக்கவில்லை.

மேலும் பேரூராட்சி அலுவலகத்தில் M. சேகரன் (குடிநீர் இணைப்பு பொருத்துநர்) என்பவர் புதிய இணைப்புக்கு ¾ இஞ்ச் பைப் 20 அடி -1 (ரூ.450), T Joint குழாய் (பித்தளை) – 1 (ரூ.300), ஆள் கூலி (அந்தோணி) ரூ.650-/ எல்லாம் சேர்த்து ரூ.1,400-/ வரும். ஆனால் என்னிடம் G.Payல் ரூ.5,800-/ பெற்றுக் கொண்டு அடாவடியாக பேசுகிறார். ரூ.4,400/-க்கு என்ன கணக்கு என்றே புரியவில்லை.

M. சேகரன் (குடிநீர் இணைப்பு பொருத்துநர்) என்பவர் மதுரை – லோயர்கேம்ப் கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் மதுரைக்கு கூட்டு குடிநீர் குழாய் பதிக்க இந்திய தேசிய நெடுஞ்சாலை (NH 183) மேற்புறம் JCP இயந்திரம் மூலம் பள்ளம் தோண்டிய போது சர்வே எண். 381/2F1 மற்றும் சர்வே எண். 1097/18 வீட்டு மனைக்கு குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டது. இதை சரி செய்ய PVC பைப் மற்றும் ரூ.4000/- வாங்கியுள்ளார். ஆனால் இதில் குடிநீர் இணைப்பை சரி செய்ய வேண்டியது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் (TWAD) பொறுப்பு.

08.11.2023 மற்றும் 09.11.2023 அன்று கூட்டு குடிநீர் திட்டத்தின் மேற்பார்வையாளரை (திரு. நவீன் அலைபேசி எண். 7010211198 மற்றும் திரு. பிரகாஷ் அலைபேசி எண். 9131570836) அவர்களிடம் கேட்ட போது துண்டிக்கப்பட்ட குடிநீர் இணைப்பை சரி செய்து கொடுக்க வேண்டியது

எங்கள் பொறுப்பு. திரு. M. சேகரன் வாங்கிய பொருட்கள் மற்றும் ஆள் கூலி ஆகியவற்றை அனுமந்தன்பட்டி பேரூராட்சி மூலம் எங்களிடம் இரசீதுடன் சமர்ப்பிப்பார். நாங்கள் அதற்கான பணத்தை கொடுத்துவிடுவோம் என்றார்.

அனுமந்தன்பட்டி பேரூராட்சி உட்கடைக்கு (அனுமந்தன்பட்டி கோவிந்தன்பட்டி, காக்கில் சிக்கையன்பட்டி) உட்பட்ட இந்திய தேசிய நெடுஞ்சாலைக்கு NH 183 மேல்புறம் குடிநீர் இணைப்பை சரி செய்ய பொதுமக்களிடம் ஒவ்வொரு இணைப்பிற்கும் PVC பைப் (3/4 இஞ்ச், 3 இஞ்ச் பைப்) வாங்கியும் ரூ.2000 பெற்றுக் கொண்டு சரி செய்து கொடுத்தார். இதில் எவ்வளவு வேலை செய்தாலும், பொருட்கள் வாங்கினாலும் அதை பில் வைத்து TWADல் பெற்றுக்கொண்டது உண்மை. இதில் B. ஜீவராஜ் (வரி வசூலிப்பவர்) என்பவரும் உடந்தை.

நான் உண்மையான சொத்துவரி மற்றும் குடிநீர் வரிகளை கட்ட தயாராக இருக்கிறேன். ஆனால் இப்பேரூராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் B. ஜீவராஜ் (வரி வசூலிப்பவர்) என்பவர் அதிக பணம் எதிர்பார்த்துக் கொண்டு என்னை தகாத வார்த்தையால் பேசுவது எனக்கு மிகவும் மன உளைச்சலை ஏற்படுத்துகிறது. ஆகையால் பொருள் கண்ட சொத்துக்களில் உள்ள குடிநீர் இணைப்பு மற்றும் சொத்து வரிகளை எனது தந்தை (M. மைக்கேல்) பெயரிலிருந்து எனது பெயருக்கு (M. ஆரோக்கியசாமி) என்ற பெயருக்கு மாற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2.** முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் **25.03.2026** நாளிட்ட அறிவிப்பு மூலம் அனுமந்தன்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

**3.** அனுமந்தன்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது **15.04.2026** நாளிட்ட அறிக்கை ந.க.எண். **52/2026**-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"அனுமந்தன்பட்டி பேரூராட்சி வார்டு **12** அரிசனத் தெரு கதவு எண். **19** இலக்கம் உள்ள வீட்டின் சொத்துவரி எண். **2210** மற்றும் குடிநீர் இணைப்பு எண். **573** மற்றும் கதவு எண். **6** இலக்கம் உள்ள வீட்டின் சொத்துவரி எண். **2220** மற்றும் குடிநீர் இணைப்பு எண். **249** முறையே எம். மைக்கேல் என தனது தந்தை பெயரில் உள்ளதனை மை. ஆரோக்கியசாமி ஆகிய தனது பெயருக்கு மாற்றம் செய்திட கோரி வரப்பெற்ற விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டு **10.04.2026** நாளிட்ட பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறை உத்தரவு மூ.மு.எண்.1ன்படி திரு. மை. ஆரோக்கியசாமி என்பவருக்கு மாற்றம் செய்யப்பட்டு வழங்கப்பட்டது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

**4.** இதனை தொடர்ந்து, அனுமந்தன்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது **20.05.2026** நாளிட்ட அறிக்கை ந.க.எண். **52/2026**ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு தனது கூடுதல் விளக்கம் அளித்துள்ளார்.

"அனுமந்தன்பட்டி பேரூராட்சி வார்டு **12**, அரிசனத் தெரு கதவு எண். **19** இலக்கம் உள்ள வீட்டின் சொத்துவரி எண். **2210** மற்றும் குடிநீர் இணைப்பு எண் **573** மற்றும் கதவு எண். **6** இலக்கம் உள்ள வீட்டின் சொத்துவரி எண். **2220** மற்றும் குடிநீர் இணைப்பு எண். **249** முறையே எம். மைக்கேல் என தனது தந்தை பெயரில் உள்ளதனை மை. ஆரோக்கியசாமி ஆகிய தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட கோரி விண்ணப்பம் வரப்பட்டது.

அனுமந்தன்பட்டி பேரூராட்சி 20.11.2012 தணிக்கை அறிக்கை பத்தி எண். 23ல் இப்பேரூராட்சியில் உள்ள **1431** எண்ணிக்கை வீட்டு குடிநீர் இணைப்புகளுக்கு வைப்புத் தொகையாக ரூ.3000- வசூல் செய்யப்பட வேண்டும் எனவும் குறைவாக வசூல் செய்யப்பட்டுள்ள வைப்புத் தொகையை **ரூ.36,53,000-/** சம்பந்தப்பட்ட குழாய் இணைப்புதாரர்களிடமிருந்து வசூல்

செய்யப்பட்டு பேரூராட்சி நிதியில் செலுத்தப்பட வேண்டுமென தணிக்கைத்தடை எழுப்பப்பட்டுள்ளது. அதன்படி சொத்துவரி மற்றும் குடிநீர் இணைப்பு பெயர் மாற்றம் செய்திட கோரி வரப்படும் விண்ணப்பதாரர்களில் முந்தைய குடிநீர் இணைப்புதாரர்களிடமிருந்து 2015ஆம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்ட குடிநீர் திட்ட விதிகளின்படி வைப்புத்தொகையாக ரூ.5000-/ வீதம் ரூ.4,88,000-/ வசூல் செய்யப்பட்டு பேரூராட்சி பொது நிதியில் செலுத்தப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து திரு. மை. ஆரோக்கியசாமி என்பவரது பெயர் மாற்றம் கோரிய மனு பரிசீலிக்கப்பட்டு, முந்தைய குடிநீர் இணைப்புகளுக்கான டேவணி தொகை உட்பட சொத்துவரி மற்றும் குடிநீர் இணைப்பிற்கான பெயர் மாற்றக் கட்டணம் கீழ்க்கண்ட விவரப்படி செலுத்தக்கோரி தெரிவிக்கப்பட்டது.

| வ.எண். | விவரம் | கட்டணத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | சொத்துவரி எண். 2210க்கு பெயர் மாற்றக் கட்டணம் | 500 |
| 2 | குடிநீர் இணைப்பு எண். 573க்கு நிலுவையிலுள்ள டேவணி தொகை | 4500 |
| 3 | குடிநீர் இணைப்பு எண். 573க்கு பெயர் மாற்றக் கட்டணம் | 500 |
| 4 | சொத்துவரி எண்.2220க்கு பெயர் மாற்றக் கட்டணம் | 500 |
| 5 | குடிநீர் இணைப்பு எண். 249க்கு நிலுவையிலுள்ள டேவணி தொகை | 4,800 |
| 6 | குடிநீர் இணைப்பு எண். 249க்கு பெயர் மாற்றக் கட்டணம் | 500 |
| | மொத்தம் | 11,300 |

மேலும், விண்ணப்பதாரர் திரு. மை. ஆரோக்கியசாமி என்பவர் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் மனு பதிவு எண். 14722231 நாள் 04.03.2026ன்படி சொத்துவரி மற்றும் குடிநீர் இணைப்பு பெயர் மாற்றம் செய்து தரக்கோரி புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டதற்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண் 49/2025 நாள் 06.03.2026ன்படி கோரிக்கை மனு ஏற்கப்பட்டு மேற்கண்டவாறு உரிய கட்டணத்தை மனுதாரர் செலுத்தும்பட்சத்தில் பெயர் மாற்றம் உடனடியாக செய்து தரப்படும் என்ற விவரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது.

மேலும் மனுதாரர் திரு. மை. ஆரோக்கியசாமி என்பவரது மற்றொரு குடியிருப்புக்கு புதிய சொத்துவரி ஏற்படுத்துவதற்கு ரூ.22,000/- பெற்றுக்கொண்டு ரூ.12,520-/க்கு மட்டும் வரித்தண்டலர் திரு. பா. ஜீவராஜ் என்பவர் இரசீது கொடுத்தாக புகார் மனுவில் தெரிவித்துள்ளார். சர்வே எண். 338/2, 339ல் 864 சதுர அடி அளவில் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு கட்டடத்திற்கு வரி விதிக்கப்படாமல் இருந்ததால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 117Aன்படி வரி விதிப்பதற்கு உட்படுத்தப்பட்டு 13 அரையாண்டுகளுக்கு வரிவிதிப்பு கணக்கீடு செய்யப்பட்டு, புதிய சொத்துவரி வரிவிதிப்பு எண். 3071 மனுதாரர் திரு. மை. ஆரோக்கியசாமி என்பவரது பெயரில் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு கட்டணத் தொகையாக ரூ.12,520-/ பெறப்பட்டு இரசீது வழங்கப்பட்டது. இத்துடன் இரசீது நகல் இணைக்கப்பட்டுள்ளது. மனுதாரர் கூடுதலாக தொகை ரூ.22,000/- செலுத்தியதாக தெரிவிக்கப்பட்டது உண்மைக்கு புறம்பான தகவலாகும்.

மனுதாரர் M. ஆரோக்கியசாமி என்ற பெயருக்கு 10.04.2026 நாளிட்ட செயல்முறைகள் உத்தரவு மூலம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

- அதே போன்று கதவு எண். 6, அரிசன தெரு என்ற முகவரியில் அமைந்துள்ள வீட்டின் சொத்துவரி (சொத்து வரி எண். 2220) மற்றும் குடிநீர் இணைப்பு எண். 249 முறையே M. மைக்கேல் என்ற பெயரிலிருந்து மனுதாரரான M. ஆரோக்கியசாமி என்ற பெயருக்கு 10.04.2026 நாளிட்ட செயல்முறைகள் ஆணை மூலம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

- புல எண்.338/2A1Bல் அமைந்துள்ள வீட்டுமனைக்கு சொத்துவரியாக ரூ.12,520/– மட்டுமே மனுதாரரிடமிருந்து வசூலிக்கப்பட்டது. ரூ.20,000/– பேரூராட்சியில் வசூலிக்கப்பட்டது என மனுதாரர் தெரிவித்து இருப்பது உண்மைக்கு புறம்பாகும்.

- அதே போன்று மேற்படி வீட்டு மனைக்கு குடிநீர் இணைப்பிற்கு ரூ.110/– மட்டுமே வசூலிக்கப்பட்டது. ரூ.1,100/– வசூலிக்கப்பட்டது என மனுதாரர் தெரிவித்திருப்பதும் உண்மைக்கு புறம்பானதாகும்.

- மேற்படி குடிநீர் இணைப்பு எண். 249 மற்றும் 573 ஆகிய வீடுகளுக்கு முறையே குடிநீர் வைப்பு தொகை வசூலிக்க தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதன்படி குடிநீர் நிலுவை வைப்பு தொகை ரூ.4,800/- மற்றும் ரூ.4,500/- செலுத்தக் கோரி அறிவிப்புகள் அனுப்பி அதன்பேரில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

8. மனுதாரரின் புகார் மனு, மற்றும் எதிர்மனுதாரரான அனுமந்தன்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் பேரூராட்சி வரிதண்டலரின் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் திரு. M. ஆரோக்கியசாமி என்பவர் தனது 03.03.2026 நாளிட்ட புகார் மனுவில் அனுமந்தன்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 381/2F1 மற்றும் சர்வே எண். 1097/18ல் அமைந்துள்ள குடியிருப்புகளுக்கான சொத்துவரி மற்றும் குடிநீர் இணைப்பு வரி ஆகியவற்றில் இடம் பெற்றிருக்கும் மனுதாரரின் தந்தையான M. மைக்கேல் என்ற பெயரிலிருந்து தனது (M. ஆரோக்கியசாமி) பெயருக்கு மாற்றம் செய்திட பேரூராட்சியில் மறுப்பு தெரிவித்திருப்பதாகவும் மற்றும் புல எண். 338/2A1Bல் அமைந்துள்ள வீட்டுமனைக்கு சொத்து வரியாக வரி வசூலிப்பவர் ரூ.22,000 பெற்றுக் கொண்டு ரூ.12,520க்கு மட்டும் இரசீது வழங்கியுள்ளார் என மனுதாரர் தெரிவித்திருப்பதை அவரது முறையீட்டு மனு மூலம் தெரிய வருகிறது.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் பேரூராட்சிக்குட்பட்ட கதவு எண். 19, அரிசன தெரு மற்றும் 6, அரிசன தெரு என்ற முகவரியில் அமைந்துள்ள வீடுகளின் சொத்துவரி மற்றும் குடிநீர் இணைப்பு வரி ஆகியவற்றிலுள்ள மனுதாரரின் தந்தை பெயரான M. மைக்கேல் என்ற பெயரிலிருந்து மனுதாரரான M. ஆரோக்கியசாமி என்ற பெயருக்கு 10.04.2026 நாளிட்ட செயல்முறைகள் ஆணை மூலம் பெயர் மாற்றம் செய்திருப்பதை பேரூராட்சி வரி தண்டலரின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்களின் வாயிலாக அறிய முடிகிறது.

மேலும் புல எண். 338/2A1Bல் அமைந்துள்ள வீட்டுமனைக்கு சொத்துவரியாக ரூ.12,520 மற்றும் குடிநீர் இணைப்புக்கு ரூ.110 மட்டுமே வசூலிக்கப்பட்டுள்ளதாக பேரூராட்சியின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் கூடுதல் தொகை செலுத்தியதற்கான ஆதாரங்கள் எதுவும் மனுதாரரால் சமர்ப்பிக்கப்படாத நிலையில், மேற்கண்ட புகார் குறித்து இம்முறைமன்ற நடுவத்தில் நடவடிக்கை மேற்கொள்ள வழிவகையில்லை.

புதியதாக சொத்துவரி திரு. மை. ஆரோக்கியசாமி என்பவரது பெயரில் விதிக்கப்பட்ட சொத்துவரி எண். 3071க்கு குடிநீர் இணைப்பு பெற ரூ.1110- செலுத்தியதாகவும் ரூ.110/-க்கு மட்டும் இரசீது வழங்கப்பட்டதாகவும் புகார் தெரிவித்துள்ளார். புதிய குடிநீர் இணைப்பு பெறுவதற்கு பதிவு மற்றும் விண்ணப்பக் கட்டணமாக ரூ.110/- கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. அதன்படியே, மனுதாரருக்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்குவதற்காக கட்டணம் ரூ.110/- பெறப்பட்ட தொகைக்கு உரிய இரசீது வழங்கப்பட்டுள்ளது. இரசீது நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. கூடுதலாக தொகை ரூ.1000/- வழங்கியதாக உண்மைக்கு புறம்பான தகவலை மனுதாரர் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் திரு. மை. ஆரோக்கியசாமி என்பவர் குடியிருப்பு திண்டுக்கல் – குமுளி தேசிய நெடுஞ்சாலை ஓரத்தில் அமைந்துள்ளது. மதுரை மாநகராட்சிக்கு லோயர் கேம்ப்-ல் இருந்து குடிநீர் திட்டம் செயல்படுத்துவதற்கு நெடுஞ்சாலை ஓரத்தில் பைப்லைன் பதிக்கும் பணிகள் மதுரை மாநகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட்டது. அப்போது, மனுதாரர் திரு. மை. ஆரோக்கியசாமி என்பவரது வீட்டு குடிநீர் இணைப்பு பழுது ஏற்பட்டு குடிநீர் கசிவு ஏற்பட்டுள்ளது. இதனை சரி செய்வதற்காக பேரூராட்சி ஒப்பந்த குடிநீர் பழுது நீக்க பொருத்துநர் திரு. எம். சேகரன் என்பவரை மனுதாரர் திரு. மை. ஆரோக்கியசாமி என்பவர் அணுகி பழுது நீக்கியதற்கு தேவையான உபகரணங்கள், வேலைக்கூலி உட்பட இருவரும் கலந்தாலோசித்து மனுதாரர் தனது சொந்த பொறுப்பில் பழுதுகளை சரிசெய்து கொண்டனர். கூடுதலாக பேரூராட்சிக்கு பணம் கொடுத்தாக உண்மைக்கு புறம்பான தகவல்களை மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், மனுதாரருக்கு இப்பேரூராட்சி தணிக்கை அறிக்கை 2011-2012 பத்தி எண்.23ல் தெரிவிக்கப்பட்டதின்படி முந்தைய குடிநீர் இணைப்புகளுக்கான நிலுவை தொகையினை எதிர்வரும் காலத்தில் செலுத்திட அறிவுறுத்தப்பட்டு பேரூராட்சி செயல் அலுவலரின் 10.04.2026 நாளிட்ட செயல்முறை உத்தரவு மூ.மு. எண். 1 மற்றும் மூ.மு. எண். 2ன்படி திரு.மை. ஆரோக்கியசாமி என்பவரது பெயருக்கு சொத்துவரி மற்றும் குடிநீர் இணைப்பு பெயர் மாற்றம் செய்யப்பட்டு வழங்கப்பட்டது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது “என தெரிவித்துள்ளார்.

5. மனுதாரர் திரு. M. ஆரோக்கியசாமி மற்றும் எதிர்மனுதாரரான அனுமந்தன்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை 26.05.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 22.04.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரரான திரு. M. ஆரோக்கியசாமி என்பவர் 26.05.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் விசாரணைக்கு ஆஜராகவில்லை.

7. எதிர்மனுதாரரான அனுமந்தன்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 23.05.2026 நாளிட்ட கடிதத்தில், இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 பணியின் தொடர்பாக பயிற்சி வகுப்புகள் 25.05.2026 முதல் 27.05.2026 வரை நடைபெறவுள்ளதால், இம்முறைமன்ற நடுவத்தில் 26.05.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு தன்னால் வர இயலாது எனவும், தனது சார்பாக அனுமந்தன்பட்டி பேரூராட்சியின் வரிதண்டலர் திருமதி. த. நதியா என்பவரை விசாரணைக்கு ஆஜராக அனுமதி அளிக்குமாறு வேண்டி கேட்டுக்கொண்டுள்ளார். பேரூராட்சி செயல் அலுவலரின் கோரிக்கை இம்முறை மன்றத்தால் ஏற்கப்பட்டதை தொடர்ந்து, பேரூராட்சி செயல் அலுவலர் சார்பாக வரிதண்டலர் திருமதி. த. நதியா என்பவர் 26.05.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

➢ அனுமந்தன்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட கதவு எண். 19, அரிசன தெரு என்ற முகவரியில் அமைந்துள்ள வீட்டின் சொத்துவரி (சொத்துவரி எண். 2210) மற்றும் குடிநீர் இணைப்பு எண். 573ல் மனுதாரரின் தந்தையான M. மைக்கேல் என்ற பெயரிலிருந்து

மேற்காணும் நிலையில், அனுமந்தன்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வரி தண்டலரின் வாக்குமூலத்தை ஏற்று, மனுதாரரின் **03.03.2026** நாளிட்ட புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

**2026**–ஆம் ஆண்டு ஆகஸ்ட் **05**–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
1. திரு. M. ஆரோக்கியசாமி,
W-12-4-20, RC தெற்குத் தெரு,
கோவிந்தன்பட்டி, அனுமந்தன்பட்டி அஞ்சல்,
உத்தமபாளையம் வட்டம், தேனி மாவட்டம் – **625 533**
2. செயல் அலுவலர்,
அனுமந்தன்பட்டி பேரூராட்சி, தேனி மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–**600 028.**
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer). (பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர்,
சென்னை–**600 028.**

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்